உறுப்பினராகப் பணியாற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்) சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களிடமிருந்து முறையாக வேட்பு மனு பெறப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினரின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுவின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்) அவர்கள் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய ஆட்சிக் குழுவின் (சிண்டிகேட்) உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெற்று ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீண்டும் கூடும் நாள் குறிப்பிட்டு, பேரவையை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 25 (1)—ன்கீழ், பேரவையின் நிகழ்ச்சிகள் 3—2—2011 வரை ஒத்திவைக்கப்பெற்று பேரவை மீண்டும் 4—2—2011 அன்று (வெள்ளிக்கிழமை) கூடும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2011 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை 3—2—2011 வரை ஒத்திவைக்கப்படுகிறது. பேரவை மீண்டும் 4—2—2011 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 9—30 மணிக்குக் கூடும்.

பேரவையின் சார்பில் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு—பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(ஆ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

19. 2009-2010-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. (1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

20. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. (1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

21. 2008-2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்)